# தமிழ்நாட்டில் அதிகரிக்கின்றனவா காவல் நிலைய மரணங்கள்?
















**பு**துக்கோட்டையில், விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட விக்னேஸ்வரன் என்பவர் மர்மமான முறையில் மரணமடைய, அது காவல் நிலைய மரணமாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. இதேபோல, திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த விசாரணைக் கைதி திராவிடமணியின் மரணம், விழுப்புரத்தில் காவல் அதிகாரிகளால் தாக்கப்பட்ட விசாரணைக் கைதி ராஜா சித்ரவதை மரணம் எனச் சமீபகாலமாக காவல் நிலைய மரணங்களும், சிறை மரணங்களும் கட்டுக்கடங்காமல் அதிகரித்துவிட்டதாக மனித உரிமை ஆர்வலர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் கடுமையாகக் குற்றம்சாட்டிவருகின்றனர்!



## எடப்பாடி கேள்வி... ஸ்டாலின் புகழாரம்!

“ ‘மனித உரிமை’ என்ற சொல்லையே தான்தான் கண்டுபிடித்தாற்போல் வானத்துக்கும் பூமிக்கும் முழங்கிய ஸ்டாலின், இன்று அவரது ஆட்சியில் தொடரும் காவல் நிலைய மரணங்களுக்குஎன்ன பதில்சொல்லப்போகிறார்?” எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார் அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி.

ஆனால், இதற்கு முற்றிலும் மாறாக, சென்னையில் சீருடைப் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஸ்டாலின், “திராவிட மாடல் ஆட்சி காவலர்கள் போற்றக்கூடிய பொற்கால ஆட்சியாக இருக்கிறது. அதேபோல, மக்களைக் காக்கக்கூடிய காவல்துறைக்குப் பக்கபலமாக தி.மு.க அரசு விளங்குகிறது. அதனால்தான் ஸ்காட்லாந்து காவல் துறையினருக்கு இணையாக, உலக அளவில் சிறந்த காவல்துறையாகத் தமிழ்நாடு காவல்துறை போற்றப்படுகிறது” எனப் புகழாரம் சூட்டியிருக்கிறார்.

தி.மு.க-வின் கடந்த மூன்றரை ஆண்டுக்கால ஆட்சியில், காவல்துறையின் செயல்பாடுகள் எப்படியிருக்கின்றன... காவல் நிலைய மரணங்கள் அதிகரித்திருக்கின்றனவா... இருவரில் யார் சொல்வது உண்மை?

## “இதயமிருக்கும் இடத்தில், போலீஸுக்கு இரும்பு குடோன்தான் இருக்கிறது!”

இது குறித்து அ.தி.மு.க முன்னாள் எம்.எல்.ஏ இன்பதுரையிடம் பேசினோம். “ ‘தன்னைத்தானே மெச்சிக்கொள்ளுமாம் தவிட்டுக்கோழி’ என்பதைப்போலத்தான் முதலமைச்சரின் பேச்சு இருக்கிறது. தமிழ்நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெறவில்லை. போலீஸ் ஆட்சிதான் நடைபெற்றுவருகிறது. தொடர்ந்து அதிகரித்துவரும் காவல் நிலைய மரணங்களே அதற்கு சாட்சி. தி.மு.க ஆட்சி அமைத்த முதல் 26 மாதங்களுக்குள்ளாகவே 20 காவல் நிலைய மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்று இறந்தோரின் பெயர்களுடன் பட்டியலிட்டு அறிக்கை வெளியிட்டார் எடப்பாடியார்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் மதுரை கார்த்திக், செவ்வாய்பேட்டை சாந்தகுமார், விழுப்புரம் ராஜா, சிவகாசி ஜெயக்குமார் என 12 நாள்களில் நான்கு பேர் காவல்துறை விசாரணையில் மரணமடைந்திருக்கிறார்கள். இந்த எண்ணிக்கை, தற்போது 24-ஐ தாண்டிவிட்டது. தி.மு.க ஆட்சிக்கு வந்த புதிதில், சென்னையில் விக்னேஷ் என்ற இளைஞரைக் காவல்துறையினர் அடித்து விசாரணை செய்ததில், லாக்கப் மரணமடைந்தார். அப்போது அதை ‘காவல் நிலைய மரணம்’ என்று நாங்கள் குற்றம்சாட்டியபோது, முதலில் ‘காவல்துறை அவரைக் கைதுசெய்யவே இல்லை’ என்று சொன்னார்கள். ஆதாரமாக சிசிடிவி காட்சிகளைக் கொண்டுவந்து கொடுத்தோம். பின்னர் முதலமைச்சரே, ‘விக்னேஷுக்கு வலிப்புநோய் இருந்தது’ என்று ஒரு காரணத்தைச் சொன்னார்.

மயிலாடுதுறையில் சத்தியவான் காவல் நிலைய மரணமடைந்தபோது, ‘அவருக்கு நெஞ்செரிச்சல்’ என்றார்கள். மேலப்பாளையம் சரவணன், ‘மயங்கி விழுந்து மரணமடைந்தார்’ என்றார்கள். தருமபுரி பிரபாகரனுக்கு, ‘உடல்நலக் குறைவு’ என்று சொன்னார்கள். திரைக்கதை, வசனம் எழுதுகிற வசனகர்த்தாவின் மகன் ஆட்சிசெய்வதால், இவர்கள் புதுப்புது காரணக் கதைகளைக் கண்டுபிடிக்கிறார்கள். ‘காவல் நிலைய மரணம் நிகழ்ந்தால், உறவினர் பார்ப்பதற்கு முன்பு போஸ்ட்மார்ட்டம் செய்யக் கூடாது’ என்று நீதிமன்றத் தீர்ப்பு சொல்கிறது. ஆனால், இவர்கள் அதைக் கடைப்பிடிப்பதில்லை.




இன்பதுரை

ஆரம்பத்தில் விக்னேஷ் மரணத்தில் கண்டனக் குரல் எழுப்பிய கம்யூனிஸ்ட் போன்ற தி.மு.க கூட்டணிக் கட்சிகளும், இப்போது வாய் மூடி மௌனம் காக்கின்றன. தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணைய நீதிபதி மணிக்குமார் அவர்களுக்கே மனித உரிமை மீறல் நடந்திருக்கிறது. அவருக்கு அளிக்கப்பட்டுவந்த பாதுகாப்பை, கடந்த அக்டோபர் 27-ம் தேதி விலக்கியிருக்கிறது தமிழ்நாடு அரசு. ஆனால், இதை அவருக்குத் தெரிவிக்கவில்லை. இந்த ஆட்சியில் நீதிபதிக்கே நீதி கிடைக்காதபோது, சாமானிய மக்களுக்கு எப்படிக் கிடைக்கும்... ஒருகாலத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி, ‘காவல்துறையின் ஈரல் கெட்டுவிட்டது’ என்று சொன்னார். ஆனால், தி.மு.க ஆட்சியில் போலீஸுக்கு இதயம் இருக்க வேண்டிய இடத்தில் இப்போது இரும்பு

குடோன்தான் இருக்கிறது” எனக் காட்டமாக விமர்சித்தார்.

### “ஜெயராஜ் – பென்னிக்ஸ்போல எந்தவொரு சம்பவமும் இப்போது நடக்கவில்லை!”




இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, தி.மு.க எம்.எல்.ஏ-வும், வழக்கறிஞருமான ஐ.பரந்தாமனிடம் விளக்கம் கேட்டுப் பேசினோம், “கடந்த அ.தி.மு.க ஆட்சியில், தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு நடந்தபோது, ‘டி.வி-யைப் பார்த்துத் தெரிந்துகொண்டேன்’ என்று எடப்பாடி பழனிசாமி சொன்னபோதே, காவல்துறை அவரின் கட்டுப்பாட்டிலேயே இல்லை என்பது உலகத்துக்கே தெரிந்தது. இவரெல்லாம் எங்கள் முதலமைச்சரை விமர்சிக்க எந்தவித அடிப்படை தார்மிக உரிமையும் இல்லை.

ஒருவரை விசாரணைக்காகவோ அல்லது கைதுசெய்தோ காவல் நிலையத்துக்கு அழைத்து வந்து, அவரைக் காவல்துறையினர் அச்சுறுத்தியோ, தாக்கியோ அதன் மூலமாக இறந்திருந்தால்தான் அது காவல் நிலைய மரணம். இன்று தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நடந்திருக்கக்கூடிய லாக்கப் டெத் என்பது, அ.தி.மு.க ஆட்சியில் இருந்ததைப் போன்ற கொடூரமான லாக்கப் டெத் அல்ல. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோ அல்லது வேறு ஏதாவது நோய் பாதிப்பின் தாக்கத்தாலோ பாதிக்கப்பட்டு நேர்ந்த மரணம்தானே தவிர, காவல்துறையினரால் அடித்து, துன்புறுத்தப்பட்டு நடந்த மரணங்கள் அல்ல.



ஐ.பரந்தாமன்



ஹென்றி திபேன்

அ.தி.மு.க ஆட்சியில், காவல்துறையினரால் லத்தி உடல் உறுப்புக்குள் நுழைக்கப்பட்டு, சித்ரவதை செய்யப்பட்டு காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கிக் கொல்லப்பட்டவர்கள் ஜெயராஜ் - பென்னிக்ஸ். அது போன்ற எந்தவொரு சம்பவமும் இந்த ஆட்சியில் நடக்கவில்லை. தனிப்பட்ட விரோதத்துக்காக நடந்த கொலை, கொள்ளைச் சம்பவங்களைக்கூட, சட்டம்-ஒழுங்கு சீர்கேடு என்று புரிதல் இல்லாமல் அரைவேக்காட்டுத்தனமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ‘தி.மு.க ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு கெட்டுப்போய்விட்டது’ என்று சொல்வதற்கோ, ‘காவல்துறை கஸ்டடியில் டெத் நடைபெறுகிறது’ என்று சொல்வதற்கோ யாருக்கும், எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. யாராவது இந்த விவகாரங்கள் குறித்து *Case by Case, Station to Station* நடந்த சம்பவங்களை எடுத்துக்கொண்டு விவாதிக்கத் தயாராக இருந்தால் வரச்சொல்லுங்கள். தி.மு.க சார்பில் ‘எது லாக்கப் டெத்; எதுவெல்லாம் லாக்கப் டெத் இல்லை’ என்பதை நானே விவாதிக்கத் தயாராக இருக்கிறேன்” என்றார் சவாலாக.

### “ஒரு காவல் நிலையத்துக்காவது நேரில் சென்றிருக்கிறாரா முதல்வர்..?”

காவல் மரணக் குற்றச்சாட்டுகள், அவற்றுக்கான ‘டெக்னிக்கலான’ விளக்கங்களை முன்வைத்து, ‘எதுதான் உண்மை?’ என மனித உரிமைச் செயற்பாட்டாளரும், மக்கள் கண்காணிப்பக இயக்குநருமான ஹென்றி திபேனிடம் பேசினோம். “தமிழ்நாடு காவல்துறை, முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடியது. அது அவருடைய துறை. ஆனால், அவர் எத்தனை காவல் நிலையங்களின் உள்ளே நடந்து சென்று ஆய்வுசெய்திருக்கிறார் என்று சொல்ல முடியுமா... பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள், ஏதேதோ நிறுவனங்களுக்கெல்லாம் சென்று பார்வையிடும் முதலமைச்சர் ஸ்டாலின், அவர் தொகுதியில் இருக்கும் ஒரு காவல் நிலையத்தையாவது நேரில் சென்று பார்த்திருக்கிறாரா... அங்கு சென்றதே கிடையாது. பின்னர் எப்படிக் காவல் நிலையத்தில் நடக்கும் கொடுமைகளெல்லாம் அவருக்குத் தெரியும்?


### “அருணா ஜெகதீசன் அறிக்கையை ஏன் அமல்படுத்தவில்லை?”

உண்மையில், அ.தி.மு.க., தி.மு.க இரண்டு ஆட்சிகளின் காவல்துறையும் ஒரே மாதிரிதான் மோசமாக இருக்கின்றன. கடந்த ஆட்சியைவிடவும் தற்போது இன்னும் மோசமாகச் சென்றுகொண்டிருக்கிறது. மிக முக்கியமாக, ‘காவல்துறைக்குக் கட்டுப்பட்டுத்தான் தி.மு.க ஆட்சியே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது’ என்பதற்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டு, ஸ்டெர்லைட் வழக்கு.

ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் அறிக்கையைச் சட்டமன்றத்தில் வைத்து ஏற்றுக்கொண்ட ஸ்டாலின், அதை அமல்படுத்தினாரா... குற்றவாளிகளாக அருணா ஜெகதீசன் 17 பேரைப் பட்டியலிட்டிருக்கிறார். ‘அந்த 17 பேருக்கும் தண்டனை பெற்றுத்தருவேன்’ என்று சொன்ன முதல்வர் ஸ்டாலினின் வாக்குறுதி என்ன ஆச்சு... ‘தூத்துக்குடி சம்பவத்தை டி.வி-யில் பார்த்துத் தெரிந்துகொண்டேன்’ என்று சொன்ன எடப்பாடி பழனிசாமியைக் கிண்டல் செய்கிறோம். ஆனால், இப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

### “காவல்துறை, முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இல்லை!”

கடந்த ஓராண்டாக நான்தான் வழக்கு நடத்திக்கொண்டிருக்கிறேன். விசாரணை அறிக்கையின் மூலம் எல்லாவற்றையும் வரிக்கு வரி தெரிந்துகொண்ட பிறகும், குற்றவாளிகளான காவல்துறையினர்மீது இந்த ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே ஏன்... சென்னையில் நடந்த மூன்று என்கவுன்ட்டர் பற்றி ஏதாவது பேசினாரா... திருச்சியிலுள்ள ஒரு எஸ்.பி., தனது காவல் கட்டுப்பாட்டு எல்லையைத் தாண்டி, தன் மனைவி எஸ்.பி-யாக இருக்கும் ஒரு மாவட்டத்தின் எல்லைக்குச் சென்று என்கவுன்ட்டர் செய்கிறார். இதைக் கேட்க யாராவது இருக்கிறார்களா?





அருணா ஜெகதீசன்

நெல்லையில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டோரின் பற்களைப் பிடுங்கிய காவல்துறை அதிகாரி பல்வீர் சிங்கை சட்டப்படி *Indian Medical Examination*-க்கு அனுப்பினார்களா... அல்லது மனநல மருத்துவர்களிடமாவது சப்மிட் செய்தீர்களா... எதுவுமே செய்யவில்லை. ஆனால், அவரை மீண்டும் பணிக்குக் கொண்டு வந்துவிட்டார்கள்.

ஆக மொத்தம் காவல்துறை முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இல்லை. அரசு வழக்கறிஞர்களும்கூட முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை இந்தச் சம்பவங்களே அம்பலப்படுத்துகின்றன. காவல்துறையின் நிலைமை மிகவும் மோசமாகிக்கொண்டிருக்கிறது. நேர்மையான சில அதிகாரிகளால்தான் இன்னமும் ஓடிக்கொண்டிருக்கிறது காவல்துறை. இனியும் தாமதிக்காமல், முதலமைச்சர் நேரடியாகக் காவல்துறையைத் தன் கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டும். முறையாக ஆய்வுசெய்ய வேண்டும்” என்றார் விரிவாக.

மக்களை அச்சுறுத்தும், துன்புறுத்தும், அவர்களிடம் அத்துமீறும் எந்த அதிகார அமைப்பையும் கட்டுப்படுத்தவேண்டியது முதல்வரின் கடமை. செய்வாரா?

**- ரா.அரவிந்தராஜ்**